# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

இலக்கம் 20, வோட் பிளேஸ்
கொழும்பு 07.

2014.10.23

**ஆணைக்குழு சுற்றறிக்கை இலக்கம் : 11/2014**

பல்கலைக்கழக உபவேந்தர்கள்

வளாக அதிபதிகள்

நிறுவகப் பணிப்பாளர்கள்

**பிரத்தியேக உதவியாளர்கள் /ஆவணக் காப்பகத்தின் ஏடு கட்டுபவர்கள் /அலுவலக இயந்திர இயக்குனர்கள் /சுருக்கெழுத்தாளர்கள் போன்றோருக்கான செலுத்துகைகள்**

மேற்குறிப்பிடப்பட்ட விடயத்துடன் தொடர்பான 1996.09.02 ஆம் திகதிய 687 ஆம் இலக்க மற்றும் 2002.11.14 ஆம் திகதிய 813 ஆம் இலக்க ஆணைக்குழுச் சுற்றறிக்கைகள் மீது தங்களது கவனம் ஈர்க்கப்படுகின்றது.

2014.08.18 ஆம் திகதி கூடிய 902 ஆவது ஆணைக்குழுக் கூட்டத்தில் கீழ் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கான செலுத்துகைகளில் 2014.10.01 ஆம் திகதி முதல் திருத்தம் மேற்கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

| | விபரம் | கட்டணம் (ரூபா) |
|---|---|---|
| i. | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உப தலைவர் /செயலாளர் மற்றும் பல்கலைக்கழக உபவேந்தர்கள் /பிரதிஉபவேந்தர்கள்/பதிவாளர்கள் மற்றும் நிறுவகப் பணிப்பாளர்களின் பிரத்தியேக உதவியாளர்களுக்கு. | மாதாந்தம் 1000.00 |
| ii. | ஆணைக்குழுக் கூட்டங்கள், நிர்வாக சபை கூட்டங்கள் /நிறுவகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவகங்களின் முகாமைக் குழுக் கூட்ட அறிக்கைகளைத் தயாரிக்கும் சுருக்கெழுத்தாளர்களுக்கு. | கூட்டமொன்றுக்கு 300.00 |
| iii. | உபவேந்தர்கள் மற்றும் பணிப்பாளர்களின் குழு / பல்கலைக்கழக சேவைகள் மேன்முறையீட்டு சபை / பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் நிலையான குழு / 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக அதிகாரங்கள் சட்டத்தின் பிரகாரம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள ஏனைய நியதிச் சட்டக் குழுக்கள் மற்றும் குறித்த அலுவலுக்கான குழுக்கள் (Ad- hoc), ஆணைக்குழு அல்லது நிர்வாக சபையினால் நியமிக்கப்பட்ட குழுக்களின் கூட்ட அறிக்கையைத் தயாரிக்கும் சுருக்கெழுத்தாளர்களுக்கு. | கூட்டமொன்றுக்கு 200.00 |
| iv. | பொதுவான அலுவல்களுக்கு மேலதிகமாக ஆவணக் காப்பகத்தின் ஏடு கட்டுபவர்களாக நியமிக்கப்பட்டுள்ள சிற்றூழியர்களுக்கு. | மாதாந்தம் 300.00 |
| v | பொதுவான அலுவல்களுக்கு மேலதிகமாக அலுவலக இயந்திரங்களை இயக்கும் சிற்றூழியர்களுக்கு. | மாதாந்தம் 350.00 |

இச் சுற்றறிக்கை அமுலுக்கு வரும் திகதியிலிருந்து 1996.09.02 ஆம் திகதிய 687 ஆம் இலக்க ஆணைக்குழுச் சுற்றறிக்கை மற்றும் 2002.11.14 ஆம் திகதிய 813 ஆம் இலக்க ஆணைக்குழுச் சுற்றறிக்கைகள் இரத்துச் செய்யப்படுகின்றன.

இதன் பிரகாரம், நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பணிவாய் வேண்டுகின்றேன்.

ஒப்பம்: பேராசிரியர் ஷனிக்கா ஹிரிம்புரேகம

தலைவர்

**பிரதிகள்:-**

1. செயலாளர், உயர் கல்வி அமைச்சு.
2. தலைவர் அலுவலகம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
3. உப தலைவர்,பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
4. உறுப்பினர்கள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
5. செயலாளர்,பல்கலைக்கழகமானியங்கள் ஆணைக்குழு
6. பீடாதிபதிகள்
7. பல்கலைக்கழகங்களின் பதிவாளர்கள்
8. கணக்காளர்,பல்கலைக்கழகமானியங்கள் ஆணைக்குழு
9. பல்கலைக்கழகங்களின் நிதிப் பொறுப்பாளர்கள் (Bursars)
10. நூலகர்கள், சிரேஷ்ட உதவி நூலகர்கள், உதவி நூலகர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள்.
11. பிரதிப்பதிவாளர்கள் /சிரேஷ்ட உதவிப் பதிவாளர்கள்/ உதவிப் பதிவாளர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள் /வளாகங்கள்
12. பிரதி நிதிப் பொறுப்பாளர்கள் /சிரேஷ்ட உதவி நிதிப் பொறுப்பாளர்கள்/ உதவி நிதிப் பொறுப்பாளர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள் /வளாகங்கள்
13. பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
14. பல்கலைக்கழகங்களின் அரசாங்க கணக்காய்வு அத்தியட்சகர்கள்
15. உயர் கல்வி நிறுவகங்களின் சிரேஷ்ட உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள் /உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள்.
16. சகல தொழிற்சங்களினதும் செயலாளர்கள்.
17. கணக்காய்வாளர் நாயகம்.

கோப்பு இலக்கம் : UGC/HR/6/1/3